உ
சிவமயம்
அருள்மிகு தெண்டாயுதபாணி துணை

10 நவம்பர் 2021

அன்புடையீர்.

**திருக்கார்த்திகை இந்த ஆண்டு 19.11.2021 வெள்ளிக்கிழமை அன்று நம் அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலில் நடைபெற உள்ளது.**

**திருக்கார்த்திகையன்று பின்வரும் நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படும்.**

- **முழு தடுப்பூசி (FULLY VACCINATED) போட்டுக் கொண்ட பக்தர்கள் மட்டும் அன்றைய தினம் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவர்.**

- **கோவிட் 19 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நடைமுறையில் இருப்பதால் அன்றைய தினம் அலகுக்காவடி மற்றும் பால் காவடி எடுக்க அனுமதியில்லை.**

- **கோயிலிலேயே தயாரித்த பால்குடங்கள் பக்தர்களுக்கு கிடைக்குமாறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.வெளியில் இருந்து தயாரித்து வரும் பால்குடங்களுக்கு அனுமதியில்லை.**

- **பால்குடங்கள் சுவாமியை ஒருமுறை வலம் வந்து நேர்த்திக்கடனை செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.**

- **பால்குடம் எடுக்க விரும்பும் பக்தர்கள் கோயில் இணையத்தளமான www.sttemple.com மூலமாக முன்பதிவு செய்து கொள்ளலாம். 12.11.2021 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் முன்பதிவு செய்யலாம்.**

- தெண்டாயுதபாணி சந்நிதிக்கு அன்றைய தினம் காலை மட்டும் அர்ச்சனை ரசீதுகள் கொடுக்கப்படும். பக்தர்கள் அர்ச்சனை ரசீதுகளை சந்நிதி முன்பு உள்ள அர்ச்சனை பெட்டிகளில் வைத்து விட்டு அங்கு வைக்கப்பட்டிருக்கும் காளாஞ்சி பிரசாதத்தை பெற்றுக் கொள்ளலாம்.

- நெய் விளக்குகள் காலை மட்டும் கோயில் பிரகாரத்தில் கொடுக்கப்பட்டு அங்குள்ள விளக்கு தட்டில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.சந்நிதி முன்பு விளக்கு ஏற்ற அனுமதியில்லை.

- அனைத்து பக்தர்களும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து எல்லா நேரங்களிலும் முகக்கவசம் அணிய வேண்டும்.

- பக்தர்கள் தங்கள் பிரார்த்தனைகளை விரைவில் முடித்துக்கொண்டு மற்ற பக்தர்களுக்கு வழிவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- திருக்கார்த்திகை அன்று மாலை சொக்கப்பான் ஏற்றுதல் இருப்பதால் இரவு 8.00 மணி வரை பக்தர்களுக்கு அனுமதியில்லை. 8.00 மணிக்கு மேல் பக்தர்கள் தரிசனம் செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் திருக்கார்த்திகை நிகழ்ச்சிகளை கோயில் இணையத்தளமான www.sttemple.com மூலம் நேரடி ஒளிப்பரப்பில் கண்டு அருள்மிகு தெண்டாயுதபாணியை தரிசனம் செய்து திருவருள் பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு
ஆலய மேலாண்மைக்குழு
செட்டியார்கள் கோயில் குழுமம்